## தலைவரின் செய்தி



பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் செயற்பாடுகள் உள்ளிட்ட 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையை அனுப்புவதற்கான வாய்ப்பு கிடைத்தமையையொட்டி பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். 2019 ஆம் ஆண்டில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து அவ்வாண்டு முழுவதும் பின்னடைவுகளை சந்தித்திருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது முன்னேற்றம் அடைந்துள்ளது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் செயல்திறனை மதிப்பாய்வு செய்யும் போது, போட்டித்தன்மை மிக்க வணிக சூழலில் நுகர்வோரைப் பாதுகாக்கும் முக்கிய சட்டரீதியான நோக்கத்திற்கு பங்களித்த சில பகுதிகள் பின்வருமாறு.

தற்போதைய தொழில்நுட்ப ரீதியாக முன்னேறிய சகாப்தத்தில், நுகர்வோர் நல்வாழ்வில் எதிர்மறையான விளைவை ஏற்படுத்தக்கூடிய நியாயமற்ற மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட வர்த்தக நடைமுறைகள் போன்ற பல்வேறு பிரச்சினைகளை நுகர்வோர் எதிர்கொள்கின்றனர். தற்போது சட்டத்தால் அனுமதிக்கப்பட்டதன் படி புதிய உத்தரவுகள் வெளியிடுவதன் மூலம் இந்த சூழலில் நுகர்வோரைப் பாதுகாக்க முயற்சிகளை எடுத்துள்ளது. நாட்டில் தரமான பொருட்கள் கிடைக்க இலங்கை தரநிலை நிறுவனம் மற்றும் இலங்கை சுங்கத்துடனும் இணைந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மேலும், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது சுகாதார அமைச்சு, தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு, சுற்றுச்சூழல் அமைச்சு, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கான தேசிய சபையின் கீழ் செயற்படும் தேசிய அளவிலான குழுக்கள் பிரதிநிதித்துவம் செய்துள்ளதுடன், நுகர்வோரைப் பாதுகாப்பதில் கொள்கை மட்டத்திலும் சட்டங்களை உருவாக்குவதிலும் மகத்தான பங்களிப்பை வழங்கியுள்ளது. நுகர்வோர் மற்றும் வர்த்தகர்களின் பாதுகாப்பிற்காக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை நுகர்வோர் விவகார அதிகாரச் சட்டத்தை திருத்தும் பணியில் தற்போது செயற்பட்டு வருகின்றது.

மேலும், இலங்கையின் வளரும் வணிகச் சூழலில் நுகர்வோர் மற்றும் வர்த்தகர்களுக்கு அதிகாரம் அளிப்பதை உறுதி செய்யும் வகையில், வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோர்களை அறிவூட்டும் நோக்கத்தில் செயற்திட்டங்கள் மற்றும் கருத்தரங்குகளை நடத்துவதில் அதிகாரசபை ஈடுபட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டில், பொது மக்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு அறிவூட்டும் நோக்கத்தில் அதிகாரசபை 755 பொது விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் 476 வர்த்தகர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் நடத்தியது.

மேலும், நுகர்வோர் உரிமைகள் குறித்து இளைய தலைமுறையினருக்கு அறிவூட்டும் நோக்கத்தில் 307 பள்ளி விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. இதற்கிடையில், 24,061 வெற்றிகரமான சோதனைகள் நடத்தப்பட்டதுடன் இதன் விளைவாக பொதுமக்களுக்கு பாதகமாக செயற்பட்ட வணிகர்களுக்கு எதிராக 22,475 நீதிமன்ற வழக்குகள் நிறுவப்பட்டன. இந்த வழக்குகளில் மொத்த அபராதம் ரூ. 104.4 மில்லியன் விதிக்கப்பட்டது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் ஆணை, நுகர்வோரின் புகார்களுக்கு செயற்படுதல், வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களைப் பாதுகாப்பது, ஆரோக்கியமான போட்டியை ஊக்குவிப்பதில் போட்டி எதிர்ப்பு நடைமுறைகளுக்கு எதிராக அதிகாரம் அளிக்கிறது. அதன்படி,2019 ஆம் ஆண்டில் 2464 நுகர்வோர் புகார்கள் பெறப்பட்டுள்ளன, மேலும் விசாரணைகள் நடத்தப்பட்டு உத்தரவுகள் வழங்கப்பட்டன. கட்டளைகளை நிறைவேற்றாத தரப்பினருக்கு எதிராக நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை எடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட பொருட்களின் சந்தை விலைகளைக் கட்டுப்படுத்த ∴உறுதிப்படுத்துவதில் அதிகாரசபை தலையிட்டு செயற்படும்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் மேற்கண்ட வெற்றிகரமான செயற்கபடுகள் பற்றி கூறுவதில் மகிழ்ச்சி அடைவதுடன், இந்த வெற்றியை அடைவதற்கு காரணமான அதிகாரிகள், ஊழியர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



மேஜர் ஜெனரால் சாந்த திசாநாயக்க (ஓய்வு பெற்ற)
தலைவர்

## பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை

### நோக்கு

ஒழுக்கம் நிறைந்த வியாபார கலாச்சாரமொன்றின் கீழ் நன்றாகப் பாதுகாக்கப்பட்ட பாவனையாளர் உலகமொன்றினை அடைதல்.

### செயற்பணி

பாவனையாளர் வலுவூட்டுதல் வர்த்தக ஒழுங்கு விதிகள் மற்றும் ஆரோக்கியமான போட்டி ஊக்குவித்தல் என்பவற்றினூடாக பாவனையாளர்களை உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாத்தல்

### எமது ஒருங்கிணைந்த நோக்கங்கள்

1) வியாபார ஒழுங்குபடுத்தல்களினூடாக பாவனையாளரை சிறப்பாக வைத்திருத்தல்
2) நியாயமற்ற வர்த்தக செயற்பாடுகளினால் பாதிக்கப்படுகின்ற பாவனையாளர்களுக்கு நிவாரணம் வழங்குதல்
3) பாவனையாளரக்கு அறிவூட்டுதல் மற்றும் விழிப்புணர்வினை ஏற்படுத்ததல் ஆகியவற்றினூடாக பாவனையாளரை வலுவூட்டுதல்
4) வர்த்தக போட்டி எதிர் செயற்பாடுகளுக்கெதிராக வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களைப் பாதுகாத்தலும் போட்டியை ஊக்குவித்தலும்
5) திறனைக் கட்யெழுப்புவதனூடாக அதிகார சபையின் செயற்திறனை மேம்படுத்தல்

### ஒருங்கிணைந்த நம்பிக்கை கோட்பாடுகள்

- **நம்பிக்கை**
  செயலாற்றுகையில் நிலைமாறாத் தன்மையினைப் பேணுதலுமம் நம்பிக்கைத் தன்மையினை உறுதி செய்தலும்.
- **நேர்மையும் நல்லிணக்கமும்**
  ஆனைத்து நடவடிக்கைகளிலும் உண்மையினையும் நியாயத்தினையும் சரியான நிலைப்பாட்டினையும் கொண்டதாக இருத்தல்.
- **பொறுப்புடைமை**
  நிறைவேற்றப்பட்ட அனைத்து செயற்பாடுகளிலும் வெளிப்படைத்தன்மைக்கும் ஏற்புடமைக்கும் பொறுப்பாயிருத்தல்
- **குழுச் செயற்பாடு**
  ஆனைத்து ஊழியர்களும் ஒவ்வொரவருடனும் முறையான தொடர்பாடல் மற்றும் நெகிழ்வுத்தன்மை என்பவற்றுடன் பரஸ்பர புரிந்துணர்வு,மதிப்பு மற்றும் நம்பிக்கை என்பவற்றினை மேம்படுத்தும் வகையில் இணைந்து செயலாற்றுதல்.
- **அங்கீகாரம்**
  ஊழியர்களின் மிகச்சிறந்த செயலாற்றலினை மெச்சுதலும் பாராட்டுதலும்.
- **இணக்கப்பாடு**
  வழங்கப்பட்ட பணியினை நிறைவேற்றுவதற்கான அர்ப்பணிப்பு மிக்க செயற்பாடு
- **ஆக்கபூர்வமான செயலாற்றுகை**
  சேவைகளை வழங்குவதற்கான விருப்பமும் தயார்நிலையும்.
- **ஆக்கமும் புத்தாக்கமும்**
  அனைத்து விடயங்களிலும் தொடர்ச்சியான மேம்பாட்டினை ஏற்படுத்துவதற்காக புதிய உத்திகளைக் கணண்டுபிடித்தல்

1வது மற்றும் 2வது மாடி
ச.தொ.ச செயலகக் கட்டிடம்,
இல.27, வொக்சோல் வீதி,
கொழும்பு - 02
2021.09.02

மதிப்பிற்குரிய கூட்டுறவு சேவைகள் ,சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் இராஜாங்க அமைச்சர்

மதிப்பிற்குரிய அமைச்சரே,

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 14 (2) இன் படி, கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகை, வருமானம் மற்றும் செலவுக் கணக்குகள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ஆகியவற்றுடன் 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையினை இங்கு சமர்ப்பிக்கிறேன்.



மேஜர் ஜெனரால் சாந்த திசாநாயக்க (ஓய்வு பெற்ற)
தலைவர்

# பாவைனையாளர் அலுவல்கள் அதிகார சபை
# வருடாந்த அறிக்கை- 2019

**பொருடளக்கம்** **பக்கம்**


1. எம்மைப்பற்றி
   - 1.1 அறிமுகம் - - - - - - - - - 01
   - 1.2 பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அமைப்பு விதி- - - 01
   - 1.3 அதிகார சபையின் பதவியினா - - - - - - 02
   - 1.4 பாவனையாளர் அலுவல்கள் பேரவை - - - - - - - 02
2. அதிகார சபையின் நோக்கங்களை - - - - - - 03
3. அதிகார சபையின் தொழிற்பாடுகள் - - - - - - - - 03
4. பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் பாவனையாளர் / அலுவல்கள் - - 04
   பேரவையின் செயல் நிறைவேற்றம் 2019
5. 2019 டிசம்பர் 31 இல் இலுள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று - - - 19
6. 2019 டிசம்பர் 31 இல மடிவடைந்த ஆண்டுக்கான விரிவான நிதி-செயலாற்றுகை - - 21
   பற்றிய கூற்று
7. 2019 டிசம்பர் 31 இல் மடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று - - 22
8. 2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை - 24
   அதிபதியின் அறிக்கை
9. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மீதான தலைவரின் கருத்துரைகள் - - 37

# 1. எம்மைப் பற்றி

## 1.1 அறிமுகம்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை 1979 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பாவனையாளர் பாதுகாப்பு சட்டம் மற்றும் புதிய வியாபாரம் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் நியாய வியாபார ஆணைக்குழுச்சட்டம் மற்றும் 1950 ஆண்டின் விலை கட்டுப்பாட்டு சட்டம் என்பவற்றினை இரத்துச் செய்து அதற்கு பதிலாக ஆக்கப்பட்ட 2003ஆம் ஆண்டு 9ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டதாகும்.

இச்சட்டத்தின் முகவுரையின்படி பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் ஒட்டுமொத்த நோக்கமானது வர்த்தக ஒழுங்குவிதி,பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளை சீராக பேணுதல், நியாயமற்ற வர்த்தக செயற்பாடுகளுக்கு எதிராக வர்த்தகர்கள் மற்றும் தயாரிப்பாளர்களை பாதுகாத்தல் மற்றும் வர்த்தக செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளின்னூடாக பாவனையாளர்களுக்கு மிகச் சிறந்த பாதுகாப்பினை வழங்குவதேயாகும். மேலும், பொருட்கள் மற்றும் சேவைகளின் வியாபாரிகள் மற்றும் தயாரிப்பாளர்களுக்கிடையே சாத்தியமானதும் ஆரோக்கியமானதுமான போட்டியினைப் பேணும் அதேவேளையில் போட்டி விலையிடலினை ஊக்குவிப்பதற்றும் எதிப்பார்க்கப்படுகின்றது.

## 1.2 அதிகார சபையின் அமைப்பு விதி

சட்டத்தின் ஏற்பாடுகளின்பம் அதிகார சபையானது சட்டத்தில் விதித்துரைக்கப்பட்ட தகைமைகள் மற்றும் அனுபவங்களைக் கொண்டுள்ள ஆட்களையும் அமைச்சரினால் நியமிக்கப்படும் தவிசாளர் மட்டும் பத்திற்குக் குறையாத ஏனைய உறுப்பினர்களையும் கொண்டுள்ளது

அதிகார சபையின் உறுப்பினர்கள்

2019இன் இறுதியிலுள்ளவாறு பதவிகளை வகித்த உறுப்பினர்களின் பெயர்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| 1. கலாநிதி லலித் நிமல் சேனவீர- | தலைவர் |
| 2. மேஜர் ஜெனரல் டீ.எம்.எஸ். திசாநாயக்க (ஓய்வு பெற்ற)- | தலைவர் |
| 3 திரு.ஏ.ஆர்.பீ.நிஹும்தீன் | முழுநேர உறுப்பினர் |
| 4. திரு.எம்.ஏ.அன்சில் | முழுநேர உறுப்பினர் |
| 5. திரு.வீ.ஜயதிலக்க | முழுநேர உறுப்பினர் |
| 6. செல்வி.டீ.சீ.டப்.ஹப்புகொட | வுசநயளரசல பிரதிநிதி |
| 7. திரு.கே.டீ.சித்ரபால | உறுப்பினர் |
| 8. திரு.ரூபன் விக்ரமஆராய்ச்சி | உறுப்பினர் |
| 9. திரு.எம்.டீ.எம.ரிஸ்வி | உறுப்பினர் |
| 10 திரு.டீ.டப்.ஜோன்தாச | உறுப்பினர் |
| 11. கலாநிதி.ஏ.எல்.பரீட் | உறுப்பினர் (இராஜினாமா) |
| 12. திரு.எம்.டீ.ஏ.சயன் | உறுப்பினர் |
| 13. கலாநிதி.ஏ.எம்.மொஹமட் ரியாஸ் | உறுப்பினர் |
| 14. திரு.சமிந்த ரோஹன கமகே | உறுப்பினர் |
| 15.திரு.இன்திக ரணதுங்க | உறுப்பினர் |

## 1.3 அதிகார சபையின் பதவியினர்

கலாநிதி.லலித் என் செனவீரா 2019 ஆம் ஆண்டில் தொடர்ந்து தலைவராக பணியாற்றினார் மற்றும் மேஜர் ஜெனரல் டி.எம்.சாந்த திசானநாயக்க (ஓய்வு) 20.12.2019 முதல் தலைவராக தொடர்ந்தார் மற்றும் பணிப்பாளர் நாயகம் திரு. எம் எஸ் எம் பவுசூர் 14.09.2018 முதல் தலைவராக தொடர்ந்தார

நயூடனபிகாய நஓலுதஇ அமூமுனமளுமய

| | |
|---|---|
| 01. செல்வி. தீப்தி திசேரா<br>M.PA [PIM-Sri J] – Attorney-at-Law<br>பணிப்பாளர்-சட்டம் மற்றும் அமுலாக்கம் | 02. திரு.டப்.டப்.ஏ.கே.பண்டார<br>B.Sc (Valuation) Sp.<br>பணிப்பாளர் - பாவனையாளர் விவகாரங்கள் மற்றும் தகவல்<br>01.10.2019 இல் இருந்து.. |
| 03. செல்வி.சமந்தா கருணாரத்ன<br>B.A (Econ) Sp (Hons), M. A. (Economics)<br>பணிப்பாளர் - போட்டி ஊக்குவிப்பு<br>01.10.2019 இல் இருந்து.. | 04. திரு.சம்பத் அங்குலுஹன<br>B. Com (Sp) Hons, MBA, MIM (SL),AIPM(SL), AUKAP, PG Dip in Pers & HRM, Dip in PM<br>பணிப்பாளர்- மனிதவளம் |
| 05. திரு.டப்.எம்.பிரியன்த<br>MPM, B.Com (Sp) Hons, AIPFM, DPFM<br>பணிப்பாளர் - நிதி | 04. 06. செல்வி.நிரன்ஜலா ஜெகநாதன்<br>ACA, MBA (J'pura)<br>பணிப்பாளர்- விலை மற்றும் முகாமைத்துவம் |
| திருமதி.ரசிக சாவித்ரீ விஜயசேகர<br>B.Sc Accounting (Sp) Hon USJ, CBA,MAAT<br>உள்ளககணக்காய்வாளர் | |

## 1.4. பாவனையாளர் அலுவல்கள் பேரவை

இந்தப் பேரவையானது வர்த்தகசார் சட்டத்துறை,வியாபார தொழில்முயற்சி முகாமைத்துவம் வர்த்தக செயற்பாடுகள் மற்றும் பாவனையாளர்கள் அலுவல்கள் ஆகிய துறைகளில் பரந்துபட்ட அனுபவத்தினைக் கொண்ட மூன்று நிபுணர்களைக் கொண்டதாக தாபிக்கப்பட்டுள்ளது.இது பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினால் குறித்துரைக்கப்படும் அனைத்து கொரிக்கைகளினையும் கவனத்திற் கொண்டு அவற்றிற்கான தீர்வினை வழங்குகின்றது. அத்துடன் சட்டத்தின் பிரிவு 38இன் கீழ் போட்டி எதிர் நடவடிக்கைகள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கும் தீர்மானம் நிறைவேற்றுவதற்கும் பிரிவு 19இன் கீழ் ஆகக்கூடிய சில்லறை விலையினை நிர்ணயிப்பதற்கும் பிரிவுகள் 19 மற்றும் 20இன் கீழ் ஆகக்கூடிய விலைகளினை அறவிடுவது தொடர்பிலும் நடவடிக்கை எடுப்பதற்குப் பொறுப்பு வாய்ந்ததாகும்.

<u>பாவனையாளர் அலுவல்கள் பேரவையின் உறுப்பினர்கள்</u>

| | |
|---|---|
| திரு. ருஸ்டி ஹபீப் | தலைவர் |
| திரு.ஆர்.ஏ.என்.ஏ.ராஜபக்ச | உறுப்பினர் |
| திரு.கே.ஜே.சீ.பீ.விக்ரமரத்ன | உறுப்பினர் |
| செல்வி.லேகா ஆரியரத்ன (சட்டத்தரணி) | பேரவையின் செயலாளர் 2019.01.03-2019.03.10 |
| செல்வி.ரங்கிக கொண்டாரகமகே (சட்டத்தரணி) | பேரவையின் செயலாளர் 2019.01.03-2019.03.10 |

## 2. அதிகார சபையின் நோக்கங்கள்

அ. பாவனையாளர்களின் உயிருக்கும் சொத்துக்கும் தீங்கு விளைவிக்கும் வகையிலான பண்டங்கள் விற்பனை அல்லது அத்தகைய சேவைகளின் வழங்கல்களிலிருந்து பாவனையாளர்களைப் பாதுகாத்தல்

ஆ. நியாயமற்ற வர்த்தக செயற்பாடுகளுக்கு எதிராக பாவனையாளர்கள் பாதுகாப்பதுடன் பாவனையாளர்களின் நலன்களில் கூடிய அக்கறை செலுத்துவதற்கு உத்தரவாதமளித்தல்.

இ. இயன்றவரையில் பாவனையாளர்கள் நியாயமான விலைகளில் பொருட்களையும் சேவைகளையும் போதுமான அளவில் பெற்றுக் கொள்வதனை உறுதிப்படுத்துதல்

ஈ. நியாயமற்ற வா்த்தக செயற்பாடுகள் ,மட்டுப்படுத்தப்பட்ட வியாபார செயற்பாடுகள் அல்லது வெறு வகையில் பாவனையாளர்கள் வா்த்தகா்களினால் சுரண்டப்படுவதற்கு எதிராக நிவாரணம் கோருதல்.

## 3. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் தொழிற்பாடுகள்

1. தொழில் முயற்சிகளுக்கிடையிலான கட்டுப்படுத்தல்கள் அல்லது நீக்குதல்கள்

   அ. கட்டுப்பாடான வா்த்தக உடன்படிக்கைகள்

   ஆ. விலை தொடர்பில் தொழில் முயற்சிகளுக்கிடையில் ஒழுங்குகளை மேற்கொள்ளுதல்

   இ. சந்தையினுள் அல்லது சந்தையின் கணிசமான பகுதியில் உள்நாட்டு வர்த்தகம் அல்லது பொருளாதார அபிவிருத்தி தொடர்பிலான அதிக்க நிலையினைக் கட்டுப்படுத்தல், அல்லது

   ஈ. ஊள்நாட்டு அல்லது சா்வதேச வா்த்தக அல்லது பொருளாதார அபிவிருத்திக்கு எதிராக பாதிப்பை ஏற்படத்துகின்ற ஏதாவது போட்டியை கட்டுப்படுத்தல்

2. போட்டி எதிர் செயற்பாடுகள் மற்றும் அதிக்க நிலையினை துஂபிரயோகம் செய்தல் என்பன பற்றி புலனாய்வு செய்தல் அல்லது விசாரணைண செய்தல்
3. பொருட்கள் செவைகளை வழங்குவோருக்கிடையில் பயன்தரவல்ல போட்டியை பேணுதலும் முன்னேற்றுதலும் மேம்படுத்தலும்.
4. பாவனையாளா்கள் கொள்வனவாளா்கள் மற்றும் பொருட்கள் சேவைகளை பயன்படுத்தும் ஏனையோர்கள் அத்தகைய பொருட்கள் சேவைகளின் விலைகள் கிடைப்பனவு தரம் வழங்கப்பட்ட வகை தொடர்பில் அவர்களின் நலன்களை மேம்படுத்தலும் உரிமைகளை முன்னேற்றுவதும் பாதுகாப்பதும்
5. கொள்வனவு செய்யப்படக்கூடிய பண்டங்களின்தும் சேவைகளினதும் தரம்,ஆற்றல்,தூய்மை,தராதரங்கள் மற்றும் விலைகள் தொடர்பில் பாவனையாளா்களுக்கு அறியத்தருதல்.
6. இச்சட்டத்தில் வித்தித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் விடயம் தொடா்பில் புலனாய்வு விசாரணைகளை மேற்கொள்ளுதல்
7. பயனுறுதி குறைந்த பெட்டி சந்தைகளில் பேட்டி விலைகளை ஊக்குவித்தல்
8. சந்தை நிலமைகளை மற்றும் பாவனையாளா் அலுவல்கள் தொடர்பான அய்வுகளை மேற்கொள்ளுதல் அறிக்கைகளை பிரசுரித்தல் மற்றும் அவை தொடர்பில் பொது மக்களுக்கு தகவல் கொடுத்தல்.
9. அரசாங்க மற்றும் தனியாா் துறைகளில் வினைத்திறன் ஆய்வுகளை மேற்கொள்ளுதல்
10. பாவனையாளா்களின் உரிமைகள் ,சிறந்த உடல் நிலை,இடர்காப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பில் பாவனையாளர்களுக்கான அறிவூட்டும் நடவடிக்கைகளை ஊக்குவித்தல்
11. பிற நிறுவனங்களுடன் சந்தை நிலைமைகள்,பாவனையாளா்கள் அலுவல்கள் தொடர்பிலான தகவல் பரிமாற்றத்தினை ஊக்குவித்தல்
12. பாவனையாளா் அமைப்புக்களின் தாபித்தலை மேம்படுத்துதல் உதவியளித்தல் மற்றும் ஊக்குவித்தல்
13. அதிகாரசபையினால் வழங்கப்பட்ட ஏதேனும் சேவைகள் தொடர்பில் ஏதேனும் அறவீடுகள் அல்லது கட்டணங்களை விதித்தல்.

14. அதிகாரசபையின் தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான வசதிப்படுத்தல்களை மேற்கொள்வதற்கு தேவையாகவுள்ள குழுவை அல்லது குழுக்களை நியமித்தல்

15. அிதகார சபையின் நோக்கத்தினை அடைவதற்கு தேவையாகவுள்ள ஏனைய நடவடிக்கைகளையும் அதிகாரசபையின் தொழிற்பாடுகளை பயனுறுதியுடன் நிறைவேற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னேடுத்தல்.

## 4. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் செயலாற்றுகை

நிருவாக கட்டமைப்பின்படி அதிகார சபையானது 6 பணிப்பாளர்களின் கீழ் தொழிற்படுகின்ற 6 பிரிவுகளையும் உள்ளக கணக்காய்வுப் பிரிவினையுங் கொண்டுள்ளது. அவையாவன:

1) பாவனையாளர் அலுவல்கள் மற்றும் தகவல்
2) இணக்க மற்றும் அமுலாக்கல்
3) விலையிடல் மற்றும் முகாமைத்துவம்
4) போட்டி ஊக்குவிப்பு
5) நிதி
6) மனித வளம் மற்றும் நிருவாகம்
7) உள்ளக கணக்காய்வு

## 5.2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் செயலாற்றுகையானது பின்வருமாறு:ங

**01. தீங்கு விளைவிக்கக்கூடியதும் தரம் குறைந்ததுமான பொருட்கள் மற்றும் சேவைகளுக்கெதிராக பாவனையாளர்களைப் பாதுகாத்தல்**

### அ. சட்டத்தின் பிரிவு 10 மற்றும் 12இன் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள்

பணிப்புரை இல.63- இப்பணிப்புரையின் பிரகாரம் உற்பத்தியாளர்கள் , இறக்குமதியாளர்கள் விநியோகஸ்தர்கள் மற்றும் வியாபாரிகள் அனைத்து உற்பத்தி / பொருட்களின் பொதிகள்,கொள்கலன்கள் மற்றும் உறைகளில் தேவையான தகவல்களை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் வாசிக்கக்கூடிய வகையில் அச்சிட வேண்டும்.

பணிப்புரை இல.69- இயக்கப்படும் மிதவை மதிப்புக்கள் (கடழயவ ழிநசயவநன எயடரநள) மற்றும் உதிரிப்பாக உற்பத்தியாளர்கள் ,இறக்குமதியாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களினல் பணிப்புரை இல 69 இன் ஊடாக குறிப்பிட்டுள்ளபடி தேவையான தகவல்களை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் வாசிக்கக்கூடிய மற்றும் அழியாத வகையில் அச்சிட வேண்டும்.

பணிப்புரை இல.70- உணவுத்தாள் கொண்டு உற்பத்தி செய்யப்படும் அனைத்து மற்றும் ஒவ்வொரு மூட்டையின் மீதும் பணிப்புரை இல.70 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை பொதி உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகளினால் மும் மொழிகளும் உள்ளடங்கும் வகையில் லேபலினை அச்சிட வேண்டும்.

பணிப்புரை இல.71- பணிப்புரை இல 71 ஊடாக விசெடமாக குறிப்பிட்டுள்ள படி அனைத்து உற்பத்தியாளர்கள் ,இறக்குமதியாளர்கள் ,விநியோகஸ்தர்கள் மற்றும் வியாபாரிகளினால் அனைத்து பொருட்களினதும் பொதிகளின் மீது தெவையான தகவல்களை வாசிக்க கூடிய மறையில் மும்மொழிகளில் அச்சிடப்பட வேண்டும்.

## ஆ. சட்டத்தின் 20(5) பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள பணிப்புரை

பணிப்புரை இல.54 - அரிசி வகைகள் 03இற்காக இல 54 ஊடாக நியமிக்கப்பட்ட அதிகூடிய சில்லறை விலையினை விட அதிக விலைக்கு விற்பனை செய்தல் , காட்சிப்படுத்தல் அல்லது விற்பனைக்காக முன்வைத்தல் போன்றன உற்பத்தியாளர், விநியோகஸ்தர் அல்லது வியாபாரியினால் மேற்கொள்ளலாகாது.

பணிப்புரை இல.11 - 2014 மார்ச் 04 திகதியிடப்பட்ட 1852/22 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ள பணிப்புரை இல 10 இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

பணிப்புரை இல55 - 2017 டிசம்பர் 06 திகதியிடப்பட்ட 2048/30 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ள பணிப்புரை இல 48 இல் தேங்காய் எனும் பிரிவு நீக்கப்பட்டுள்ளது.

பணிப்புரை இல56 - அரிசி வகைகள் 02இற்காக இல 56 ஊடாக நியமிக்கப்பட்ட அதிகூடிய சில்லறை விலையினை விட அதிக விலைக்கு விற்பனை செய்தல் , காட்சிப்படுத்தல் அல்லது விற்பனைக்காக முன்வைத்தல் போன்றன உற்பத்தியாளர், விநியோகஸ்தர் அல்லது வியாபாரியினால் மேற்கொள்ளலாகாது.

பணிப்புரை இல57 - சீமெந்து வகைகள் 03இற்காக இல 57 ஊடாக நியமிக்கப்பட்ட அதிகூடிய சில்லறை விலையினை விட அதிக விலைக்கு விற்பனை செய்தல் , காட்சிப்படுத்தல் அல்லது விற்பனைக்காக முன்வைத்தல் போன்றன உற்பத்தியாளர், விநியோகஸ்தர் அல்லது வியாபாரியினால் மேற்கொள்ளலாகாது.

## இ. இறக்குமதி செய்யப்பட்ட தரம் குறைந்த பொருட்களை கண்காணித்தல்

நாட்டிற்குள் நுழைவு சாவடிகளினூடாக தரம் குறைந்த பொருட்கள் நுழைவதனை தவிர்ப்பதற்கு இலங்கை கட்டளைகள் நிறுவகத்துடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள பரிசொதனைத் திட்டத்தின் கீழ் அத்தகைய 97 சந்தர்ப்பங்களில் இலங்கை கட்டளைகள் நிறுவகமானது அவற்றினை மீள ஏற்றுமதி செய்யும் படி பரிந்துரை செய்துள்ளது.

## ஈ. தேசிய குழுக்களினைப் பிரதிநிதித்துவப்படத்தலம் பாவனையாளர்களைப் பாதகாப்பதற்கான கொள்கைகள் /சட்டவாக்கத்தினை அறிமுகப்படுத்துவதற்கு பங்களிப்பு செய்தலும்.

புாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையானது சுகாதார அமைச்சு,தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு. சுற்றுப்புறச் சூழல் அமைச்சு, மின்சக்தி மற்றும் வலு அமைச்சு மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய பேரவை ஆகிய அமைச்சுக்களின் கீழ் தொழிற்பட்டு வருகின்ற தேசிய மட்டத்திலான குழுக்களினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் பாவனையாளர்களினைப் பாதுகாப்பதற்கான கொள்கைகள் மற்றும் சட்டவாக்கங்களினை அறிமுகப்படுத்துவதற்கான பங்களிப்பினை வழங்கி வருகின்றது.

**2. ஏமாற்று நடவடிக்கைகள் மற்றும் நியாயமற்ற வர்த்தக செயற்பாடகளுக்கெதிராக பாவனையாளர்களைப் பாதுகாத்தல்**

அ.வர்த்தக சமூகத்திற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

சிவில் சமூகத்தினைச் சென்றடையக் கூடிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் நலிவடைந்த குழக்களினைப் பாதுகாத்தல் தரமுயர்த்ததல் மற்றும் வலுவூட்டுதல் போன்ற செயற்பாடுகள் போட்டி ஊக்குவிப்பினை ஏற்படத்துவதற்கான வினைத்திறன் வாய்ந்த நடவடிக்கைகளாகும். இது திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்ட வியாபாரிகள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக அமுல்படுத்தப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதிகார சபையானது வியாபார சமூகத்திற்கான 476 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியுள்ளது.

ஆட்டவணை 1- 2019 இல் நடாத்தப்பட்ட வியாபாரிகள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தியுள்ளது.

| மாகாணம் | மாவட்டம் | வியாபாரிகள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் |
|---|---|---|
| | | நிகழ்ச்சித்தட்டங்களின் எண்ணிக்கை |
| மத்திய மாகாணம் | கண்டி | 19 |
| | மாத்தளை | 30 |
| | நுவரெலியா | 26 |
| கிழக்கு மாகாணம் | அம்பாறை | 23 |
| | மட்டக்களப்பு | 10 |
| | திருகோணமலை | 04 |
| வடமத்திய மாகாணம் | அநுராதபுரம் | 04 |
| | பொலனறுவை | 03 |
| வட மாகாணம் | யாழ்ப்பாணம் | 08 |
| | கிளிநொச்சி | 44 |
| | மன்னார் | 26 |
| | முல்லைத்தீவு | 21 |
| | வவுனியா | 33 |
| வட மேல் மாகாணம் | குருநாகல் | 10 |
| | புத்தளம் | 90 |
| சப்பிரகமுவ மாகாணம் | கேகாலை | 04 |
| | இரத்தினபுரி | 09 |
| தென் மாகாணம் | காலி | 09 |
| | அம்பாந்தோட்டை | 07 |
| | மாத்தறை | 28 |
| ஊவா மாகாணம் | பதுளை | 01 |
| | மொனராகலை | 28 |
| மேல் மாகாணம் | கொழும்பு | 09 |
| | கம்பஹா | 07 |
| | களுத்துறை | 23 |
| **மொத்தம்** | | 476 |

## ஆ. சந்தை திடீர் சேதனைகளும் புலனாய்வு நடவடிக்கைகளும்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின்படி,லேபலில் அறிவித்தல்கள் குறிப்பிடப்படுவதனை மீறுதல், குறிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக விற்பனை செய்தல் , பொருட்களை விற்பனை செய்ய மறுத்தல், பொருட்களின் உரித்துடைமையினை நிராகரித்தல்,பொருட்களைப் பதுக்குதல்,அதிகார சபையின் எழத்து மூலமான முன்னறிவித்தலின்றி குறித்த சில பொருட்களின் மொத்த மற்றும் சில்லறை விலைகளை அதிகரித்தல்,விலை விபரப்பட்டியலைக் காட்சிப்படுத்தாமை,கொள்வனவாளர்களுக்கு பற்றுச்சீட்டு வழங்காமை,தவறான அல்லது ஏமாற்று நடத்தை மற்றும் தயாரிப்பாளர்கள் / வியாபாரிகளினால் பொய்யான பிரதிநிதித்துவங்களை வகித்தல் என்பவற்றினைக் கண்டறிவதற்காக திடீர் சொதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. குற்றமிழைக்கும் வியாபாரிகள் உாயி நீதவான் நீதிமன்றுகளில் ஆஜர்படுத்தப்பட்டு சட்டத்தின் 60ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் அடிப்படையில் தண்டப்பணம் விதிக்கப்படுகின்றன.

அட்டவணை - 2 - சந்தை திடீர் சோதனைகள் மற்றும் விதிக்கப்பட்ட தண்டப்பணங்களின் முன்னேற்றம்

| மேற்கொண்ட நடவடிக்கைகள் (இலக்கு) | திடீர் சோதனைகளின் எண்ணிக்கை | வழக்குகளின் எண்ணிக்கை | விதிக்கப்பட்ட தண்டம் (ரூ) |
|---|---|---|---|
| சந்தை திடீர் சோதனைகள் மற்றும் புலனாய்வுகள் | 9,481 | 9,021 | 45,831,400 |
| -பிரிவு 10 மீதான சந்தை புலனாய்வுகள் (பிரிவு 10இன் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகளினை மீறுதல்) | 260 | 219 | 1,093,700 |
| பிரிவு 11 மீதான சந்தை புலனாய்வுகள் (குறித்துரைக்கப்பட்ட விலையிலும் பார்க்க அதிக விலையில் விற்றல்) | 691 | 574 | 3,258,000 |
| பிரிவு 12 மீதான சந்தை புலனாய்வுகள் (நியமங்களுடன் இணங்காமை) | 2 | 1 | 6,000 |
| பிரிவு 15 மீதான சந்தை புலனாய்வுகள் | 24 | 24 | 103,000 |
| பிரிவு 16 மீதான சந்தை புலனாய்வுகள் (ஏதேனும் பொருளின் உரித்துடமையை நிராகரித்தல்) | 2 | - | - |
| பிரிவு 17 மீதான சந்தை புலனாய்வுகள் (பொருட்களை பதுக்கி வைத்தல்) | 21 | 7 | 79,500 |
| பிரிவு 18 மீதான சந்தை புலனாய்வுகள் (ஆ.சி.விலையினை மீறுதல்) | 2,246 | 1,929 | 8,134,800 |
| பிரிவு 20 மீதான சந்தை புலனாய்வுகள் | 6,544 | 6,094 | 18,970,100 |
| பிரிவு 26 மீதான சந்தை புலனாய்வுகள் (விலைப்பட்டியலினைக் காட்சிப்படுத்தாமை) | 12 | 13 | 26,000 |
| பிரிவு 28 மீதான சந்தை புலனாய்வுகள் (வியாபாரிகள் கொள்வனவாளர்களுக்கு பற்றுச்சீட்டு வழங்குதல்) | 2,454 | 2,416 | 15,110,000 |
| பிரிவு 30 மீதான சந்தை புலனாய்வுகள் (தவறான அல்லது ஏமாற்று நடவடிக்கை) | 1,277 | 1,167 | 6,964,000 |
| பிரிவு 30 மற்றும் 31 மீதான சந்தை புலனாய்வுகள் ((தவறான மற்றும் பொய்யான பிரதிநிதித்துவம்) | 1,047 | 1,010 | 4,824,000 |
| பிரிவு 31 மீதான சந்தை புலனாய்வுகள் (பொய்யான பிரதிநிதித்துவம்) | 24,061 | 22,475 | 104,400,500 |
| மொத்த திடீர் சோதனைகளும் தண்டங்களும் | | | |

## பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் நடாத்தப்பட்ட விசேட தீவீர் சோதனைகள










**பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால்**

**2019ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட விசேட தீவிர் சோதனைகள்**




**பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால்**

**2019ஆம் ஆண்டில் விதிக்கப்பட்ட தண்டங்கள்**



### 3. நியாயமற்ற வர்த்தக செயற்பாடுகளினால் பாதிக்கப்பட்ட பாவனையாளர்களுக்கு நிவாரணம் வழங்குதல்

## அ. பாவனையாளர் முறைப்பாடுகளைக் கையாளுதல

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது சட்டத்தின் 13 மற்றும் 32ஆம் பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் அடிப்படையில் பாவனையாளர் முறைப்பாடுகளைக் கையாள்கின்றது.அதிகார சபையினால் தயாரிப்பாளர் அல்லது வியாபாரியினால் வழங்ப்பட்ட கட்டுறுத்து அல்லது உத்தரவாதத்திகு இஒங்காத பொருட்களின் விற்பனை அல்லது சேவைகளின் வழங்கல் தொடர்பான மறைப்பாடுகளை விசாரணை செய்ய முடியும்.

2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் கையாளப்பட்ட பாவனையாளர் முறைப்பாடுகளின் முன்னேற்றமானது அட்டவணைகள் 3 மற்றும் 4 இல் தரப்பட்டுள்ளது

| | மொத்தம் |
|---|---|
| பெறப்பட்ட முறைப்பாடுகள் | 2464 |
| அ) தபால் மூலம் | 1619 |
| ஆ) தொலைபேசி அழைப்புக்களின் மூலம் | 845 |
| திடீர் சேதனைகள் (தலைமை அலுவலகம் / மாவட்ட அலுவலகம்) | 882 |
| ஏனைய நிறுவனங்களுக்கு குறிப்பீடு செய்யப்பட்டவை | 277 |
| முறையான விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்காக | 151 |
| மாவட்ட அலகுகளுக்கு குறிப்பீடு செய்வதன் மூலம் (தனிப்பட்ட நிவாரணத்திற்காக) | 1430 |
| நிறைவு செய்யப்பட்ட முறைப்பாடுகள் | 728 |

(முன்னைய ஆண்டு முறைப்பாடுகள் உள்ளடங்கலாக)

ஆட்டவணை -4- பாவனைகள் முறைப்பாடகள் தொடர்பில் நடாத்தப்பட்ட விசாரணைகள்

| பொது மக்களின் முறைப்பாடகளின் அடிப்படையில் நடாத்தப்பட்ட விசாரணைகள் | |
|---|---|
| விசாரணைகளின் எண்ணிக்கை | 281 |
| தீர்க்கப்பட்ட விசாணைகள் | 105 |
| வழங்கப்பட்ட கட்டளைகள் | 23 |

(முன்னைய ஆண்டு முறைப்பாடுகள் உள்ளடங்கலாக)

நீதிமன்ற வழக்குகள்

| வகை | 2019 |
|---|---|
| பாவனையாளர் வலுவூட்டல் அலகினால் தாக்கல் செய்யப்பட்ட புதிய வழக்குகள் | 19 |
| விசாரணைக்கு எடுக்கப்பட்டவை | 364 |
| தண்டப்பணங்கள் (நீதிமன்ற வழக்குகளினால் பெறப்பட்டவை) | Rs. 100,000/- |

## 04. பாவனையாளர் அறிவூட்டலும் வலுவூட்டலும்.

### அ. பாவனையாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது பாவனையாளர்களுக்கு அவர்களின் பாவனையாளர் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் நடைமுறையிலுள்ள பாவனையாளர் சட்டம் சிறந்த பாவனையாளரின் பண்புகள் மற்றும் சிறந்த வியாபார செயற்பாடுகள் போன்றவை குறித்து அறிவூட்டுவதற்காக இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் , கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் ,கண்காட்சிகள் போன்றவற்றினைப் பயன்படுத்துகின்றது. மேற்குறித்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாக பாவனையாளர்கள் உரிமைகள் தினமானது பாவனையாளர் கழுக்கல் மற்றும் வர்த்தக சமூகம் என்பவற்றின் பங்குபற்றுதலுடன் கொண்டாடப்பட்டு வருகின்றது.பாவனையாளர் உரிமைகள் மற்றும் சட்டத்தின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பிலும் நாடளாவிய ரீதியிலான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

அட்டவணை -5- பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

| மாகாணம் | மாவட்டம் | வியாபாரிகள் விழிப்புணர்வு | பொது மக்கள் | பாடசாலை விழிப்புணர்வு |
|---|---|---|---|---|
| மத்திய மாகாணம் | கண்டி | 19 | 31 | 9 |
| | மாத்தளை | 30 | 17 | 2 |
| | நுவரெலியா | 26 | 16 | 1 |
| கிழக்கு மாகாணம் | அம்பாறை | 23 | 95 | 82 |
| | மட்டக்களப்பு | 10 | 68 | 72 |
| | திருகோணமலை | 4 | 14 | 10 |
| வடமத்திய மாகாணம் | அநுராதபுரம் | 4 | 31 | 1 |
| | பொலனறுவை | 3 | 11 | 1 |
| வட மாகாணம் | யாழ்ப்பாணம் | 8 | 32 | 7 |
| | கிளிநொச்சி | 44 | 25 | 4 |
| | மன்னார் | 26 | 18 | 6 |
| | முல்லைத்தீவு | 21 | 16 | 5 |
| | வவுனியா | 33 | 29 | 70 |
| வட மேல் மாகாணம் | குருநாகல் | 10 | 25 | 7 |
| | புத்தளம் | 90 | 50 | 21 |
| சப்பிரகமுவ மாகாணம் | கேகாலை | 4 | 16 | 3 |
| | இரத்தினபுரி | 9 | 10 | 2 |
| தென் மாகாணம் | காலி | 9 | 32 | 6 |
| | அம்பாந்தோட்டை | 7 | 14 | 2 |
| | மாத்தறை | 28 | 53 | 8 |
| ஊவா மாகாணம் | பதுளை | 1 | 33 | 9 |
| | மொனராகலை | 28 | 45 | 23 |
| மேல் மாகாணம் | கொழும்பு | 9 | 40 | 9 |
| | கம்பஹா | 7 | 15 | 4 |
| | களுத்துறை | 23 | 19 | 5 |
| மொத்தம் | | 476 | 755 | 307 |

## பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்















**5. போட்டி எதிர் நடவடிக்கைகள் மற்றும் ஆரோக்கியமான போட்டி ஊக்குவிப்புக்கெதிராக வர்த்தகர்கள் மற்றும் தயாரிப்பாளர்களைப் பாதுகாத்தல்**

| செயற்பாடு | மொத்தம் |
|---|---|
| வியாபார நடவடிக்கைகள் தொடர்பான முறைப்பாடுகள் குறித்த விசாரணை<br>போட்டி எதிர் மற்றும் நியாயமற்ற வர்த்தக செயற்பாடுகள் தொடர்பில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு முறையீடு செய்யப்பட்ட முறைப்பாடுகள் மீதான தலையீடு<br>• முன்னைய காலப்பகுதியில் பெறப்பட்ட முறைப்பாடுகள்<br>• குறித்த காலப்பகுதியில் பெறப்பட்ட முறைப்பாடுகள்<br>• பேரவைக்கு குறிப்பீடு செய்யப்பட்ட முறைப்பாடுகள்<br>• குறித்த காலப்பகுதியில் தீர்வு காணப்பட்ட முறைப்பாடுகள்<br>• செயல்முறையிலுள்ள முறைப்பாடுகள் | <br><br><br><br>10<br>35<br>01<br>28<br>23 |
| போட்டி வழங்கலுக்கான களநிலை மட்டத்தினைப் பேணுதல்<br>2007.07.11 ஆம் திகதிய 1505∴15ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் கீழ் தற்பொது ஐந்து உற்பத்திப் பொருட்கள் தொடர்பான அரசாங்க கொள்கை அமுலாக்கமானது அடையாளங் காணப்பட்டுள்ளது.<br>• பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள்<br>• முன்னேடுக்கப்பட்ட விண்ணப்பங்கள் | <br><br><br><br>328<br>328 |
| அத்தியாவசிய பொருட்கள் தொடர்பான விலைக் கண்காணிப்பு<br>• கொழும்பு மற்றும் சூழவுள்ள இடங்களை அடிப்படையாகக் கொண்ட அறிக்கை<br>• மாவட்ட ரீதியிலான தரவுப் பகுப்பாய்வும் அறிக்கையிடலும் | <br>12<br>12 |
| உணவுப் பொருட்கள் தொடர்பான விலைக் கண்காணிப்பு<br>• அத்தியாவசிய பொருட்களின் நாளாந்த சில்லறை விலைகள் தொடர்பான அறிக்கை<br>• பழங்கள் நாளாந்த சில்லறை விலைகள் தொடர்பான அறிக்கை<br>• விசேட விலைகள் தொடர்பான அறிக்கை | <br>121<br>121<br>174 |
| ஆராய்ச்சி ஆய்வு<br>விசேட ஆய்வு | 01<br>05 |
| சந்தை அமைப்பினை அறிந்து கொள்ளுதல் | 01 வருடாந்த அறிக்கை (2018)<br>01 இடை வருடாந்த அறிக்கை (2019) |

## இருவழி கையடக்க தொலைபேசி சேவை (1977)

இருவழி கையடக்க தொலைபேசி பதிலளிப்பினூடாக பொதுமக்களுக்கு சில்லறை விலை தகவல்களை (குறுஞ்செய்தி இல 1977) வழங்குதல்
குறித்த அண்டு காலப்பகுதியிலும் அதிகாரசபையானது குறுஞ்செய்தி தொலைபேசி இலக்கம் 1977 இனூ டாக தொடர்ச்சியாக செவையினை அளித்துள்ளதுடன் சில்லறை சந்தைகளில் (கொழும்பு,புறக்கோட்டடை, தெமட்டக்கொடை, பொறளை, நுகேகொடை மற்றும் வெள்ளவத்தை) போன்ற சந்தைகளில் மரக்கறிகள் .பழங்கள் மற்றும் உணவுப் பொரட்களின் விலைகள் நாளாந்த அடிப்படையில் சேகரிக்கப்படுகின்றது. இவை கணனி முறைமையில் நாளாந்தம் பதிவேற்றம் செய்யப்படுகின்றது.இது பாவனையாளர்களுக்கு அவர்களின் கொள்வனவு தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு பெரிதும் உதவுகின்றது.

ஏனைய ஒழுங்கு முறைப்படுத்தும் அதிகாரசபைகள் மற்றும் அக்கறைதாரர் நிறுவனங்களுடன் வினைத்திறன் வாய்ந்த உறவுகளைத் தாபித்தலும் பேணுதலும்

01. உணவுப்பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ கட்டமைப்பு ஆலோசனை சபை- இலங்கை தரநிர்ணய நிறுவகம்
02. முகாமைத்துவக் கட்டமைப்பினை சான்றுப்படுத்தும் சபை-இலங்கை தரநிர்ணய நிறுவகம்
03. இலங்கையினுள் பொலித்தீன் மற்றும் ப்ளாஸ்டிக் பாவனையை தடை செய்யும் மற்றும் கட்டுப்படுத்தும் செயற்படுத்தும் முறைகளை வலுப்படுத்துவதற்கான சபை- மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு
04. சுற்றாடல் ஒலி முகாமைத்துவம் மற்றும் இலங்கையினுள் பாலிகுளோரினேடட் பைபினைல் (ீஊடீஎ) கழிவு மற்றும் ீஊடீ இன் மாசு∴உள்ளடக்கப்பட்ட உபகரணங்களை வெளியேற்றும் திட்ட முன்னேடுப்பு சபை - மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு

05. ர்ஊகுஊ மொன்ரியான் முதல் சட்டமூலத்தினை இலங்கையினுள் உபயெகிப்பதற்கான நடவடிக்கைகளை வலுப்படுத்தும் சட்டதிட்டங்களை அறிமுகப்படுத்தும் குழு-மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு
06. இலங்கையினுள் கழிவு முகாமைத்துவத்திற்காக உற்பத்தியாளர்கள் ∴ வியாபாரிகள் மற்றும் பாவனையாளர்களின் பரந்த பொறுப்புணர்விற்கான அடிப்படைகளை செயற்படுத்தும் குழு- மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு
07. இலங்கையினுள் தொழிற்சாலை கழிவு முகாமைத்துவத்திற்கான தொழில்நுட்ப ஆலோசனைக்குழு-(வுயுஊஆஜஊ) மத்திய சுற்றாடல் அதிகார சபை
08. பேசல்,ரோடர்டேம்,ஸ்டொக் ஹோம் மற்றும் மினமெட் சம்மெளனங்களுக்கமைய நிறுவப்பட்ட சபை- மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு
09. இலங்கை தேசிய மின்னணு தொழில்நுட்ப சபை-இலங்கை தரநிர்ணய நிறுவகம்
10. தேசிய இரசாயன பொருட்கள் முகாமைத்துவ கொள்கை தயாரிக்கும் கூட்டு சபை-மகாவெலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு
11. பாதுகாப்பு தொப்பி தொடர்பான இலங்கை தரங்களை திருத்தியமைக்கும் செயற்குழு
12. அரச கணக்காய்வு குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை முன்னேடுப்பதனை நோக்காகக் கொண்டு மின்னணுக் கழிவு முகாமைத்துவ தேசிய கொள்கைகளை தயாரிக்கும் குழு-மகாவெலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு
13. இரசாயன பொருட்களினால் ஏற்படும் விபத்துக்களை தடுத்தல் மற்றும் தயார்ப்படுத்துவதற்கான குழு-மத்திய சுற்றாடல் அதிகாரசபை
14. பேசல் சம்மேளனத்தினை செயற்படுத்தும் தொழில்நுட்ப புத்திஜீவிகள் குழு-மத்திய சுற்றாடல் அதிகாரசபை
15. தேசிய போசணை கொள்கைக்கான சபை- சுகாதார,போசணை மற்றும் தேசிய வைத்திய அமைச்சு
16. வாழ்கைச்செலவு குழுக்கூட்டம்- நிதியமைச்சு
17. உணவு ஆலோசனைக்குழு- சுகாதார அமைச்சு

**நியாயமான விலையினை உறுதிப்படுத்தல்**

## அ.விதித்துரைக்கப்பட்ட பொருட்களின் விலை ஒழுங்குவிதி

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது சட்டத்தின் 18,19 மற்றும் 20ஆம் பிரிவுகளில் விதித்துரைக்கப்பட்ட தத்துவங்களின் அடிப்படையில் அடையாளங்காணப்பட்ட பொருட்களின் சந்தை விலைகளில் தலையீடு செய்கின்றது. தெரிவு செய்யப்பட்ட பொருட்களின் விலைகளை நிலையாகப் பேணுவதற்கு / நிர்ணயிப்பதற்கு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கீழே அட்டவணை 7 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 7- குறித்துரைக்கப்பட்ட பொருட்களின் விலைகளை நிலையாகப் பேணுவதற்கு / நிர்ணயிப்பதற்கு பாவனையாளர் அதிகாரசபையினால் எடுக்கப்பட்ட நடவடிக்கை

| பொருள் | விண்ணப்பங்களின் அளவு |
|---|---|
| கேஸ் | கேஸ் தொடர்பான 04 விண்ணப்பங்களுக்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளது |
| சீமெந்து | சீமெந்து தொடர்பான 16 விண்ணப்பங்களுக்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளது |
| முழு ஆடைப்பால் மா | முழு ஆடைப்பால் மா தொடர்பான 18 விண்ணப்பங்களுக்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளது |
| ஆடையற்ற பால்மா | பால்மா தொடர்பான 01 விண்ணப்பங்களுக்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளது |
| கோதுமை மாவு | கோதுமை மாவு தொடர்பான 01 விண்ணப்பங்களுக்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளது |
| டின்னில் அடைக்கப்பட்ட மீன் | டின்னில் அடைக்கப்பட்ட மீன் தொடர்பான 01 விண்ணப்பங்களுக்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளது |

கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் அளவு

| பொருள் | விண்ணப்பங்களின் அளவு |
|---|---|
| சீமெந்து | 24 |
| முழு ஆடைப்பால் மா | 06 |
| குழந்தைகளுக்கான பால்மா | 01 |
| ஆடையற்ற பால்மா | 01 |
| கேஸ் | 03 |
| கோதுமை மாவு | 01 |
| டின்னில் அடைக்கப்பட்ட மீன் | 01 |

வழங்கப்பட்ட இடைக்கால கட்டளைகளின் அளவு

| பொருள் | விண்ணப்பங்களின் அளவு |
|---|---|
| சீமெந்து | 13 |
| முழு ஆடைப்பால் மா | 02 |
| ஆடையற்ற பால்மா | 01 |
| கோதுமை மாவு | 01 |
| டின்னில் அடைக்கப்பட்ட மீன் | 01 |

### ஊழியர்கள் தொடர்பான விபரங்கள்

| பதவி | சம்பளக் குறியீடு | அனுமதிக்கப்பட்ட ஊழியர் தொகை | தற்போதுள்ள ஊழியர்களின் தொகை | |
|---|---|---|---|---|
| | | | நிலையான | தற்காலிக / ஒப்பந்த |
| **சிரேஷ்ட முகாமையாளர்** | | | | |
| பணிப்பாளர் நாயகம் | HM 2-1 | 1 | 1 | 0 |
| பணிப்பளர் / பேரவை செயலாளர் | HM 1-1 | 7 | 5 | 0 |
| **முகாமையாளர்** | | | | |
| உள்ளக கணக்காய்வாளர் | MM 1-1 | 1 | 1 | 0 |
| பிரதிப்பணிப்பாளர் | | 12 | 1 | 0 |
| உதவிப்பணிப்பாளர் | | | 4 | 0 |
| பிரதி / உதவிப் பணிப்பாளர்-பிராந்திய | | 12 | 6 | 0 |
| பிரதி / உதவிப் பணிப்பாளர்-ஒன்றிணைந்த தொடர்பாடல் | | 1 | 0 | 0 |
| **கனிஷ்ட முகாமையாளர்** | | | | |
| கணக்காய்வு அதிகாரி | JM 1-1 | 2 | 2 | 0 |
| முறைமை நெறிப்படுத்தனர் | | 1 | 0 | 0 |
| சிரேஷ்ட புலனாய்வு அதிகாரி | | 27 | 27 | 0 |
| சிரேஷ்ட புலனாய்வு அதிகாரி | | 1 | 0 | 0 |
| சிரேஷ்ட சந்தை ஆய்வு மற்றும் பகுப்பாய்வு | | 1 | 0 | 0 |
| சிரேஷ்ட கணக்கீட்டு அலுவலர் | | 2 | 1 | 0 |
| அந்தரங்க செயலாளர் (தலைவர் ) | | 1 | 1 | 0 |
| அந்தரங்க செயலாளர் (ப.நா) | | 1 | 0 | 0 |
| சிரேஷ்ட நிருவாக / மனிதவள அலுவலர் | | 1 | 0 | 0 |
| சிரேஷ்ட சட்ட மற்றும் வலுவாக்கல் அலுவலர் | | 2 | 1 | 0 |
| சிரேஷ்ட கிரய அலுவலர் | | 1 | 1 | 0 |
| **அமுலாக்கல் / தொழிற்பாட்டு / விரிவாக்கல்** | | | | |
| தரவு ஒருங்கிணைப்பாளர் | MA 5-2 | 1 | 2 | 0 |
| புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர் | | 1 | 0 | 0 |
| சந்தை ஆராய்ச்சி பகுப்பாய்வாளர் | | 1 | 27 | 0 |
| ஆவணப்படுத்தும் உத்தியோகத்தர் | | 6 | 0 | 0 |
| நூலகர் | | 1 | 0 | 0 |
| கிரய உத்தியோகத்தர் | | 15 | 1 | 0 |
| கணக்கு உத்தியோகத்தர் | | | 1 | 0 |
| நிருவாக உத்தியோகத்தர் II | | 5 | 0 | 0 |
| சிரேஷ்டசட்ட மற்றும் அமுலாக்கல் உத்தியோகத்தர் | | 6 | 0 | 0 |
| புலனாய்வு அதிகாரி | | 450 | 1 | 0 |
| ஊடக அதிகாரி (ஒப்பந்த அடிப்படையில் ) | | 1 | 1 | 0 |
| **முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்)** | | | | |
| புத்தகம் வைப்பவர் | MA 2-2 | 1 | 0 | 0 |
| புகைப்படக் கலைஞர் (ஒப்பந்த அடிப்படையில்) | | 1 | - | 0 |
| **முகாமைத்துவ உதவியாளர் ( தொழில்நுட்பம் சாரா)** | | | | |
| முகாமைத்துவ உதவியாளர் | MA 1-2 | 51 | 43 | 1 |
| **ஆரம்ப மட்ட திறன் விருத்தி** | | | | |
| சாரதி | PL 3 | 28 | 26 | 1 |
| **ஆரம்ப மட்ட திறன் விருத்தியற்ற** | | | | |
| அலுவலக உதவியாளர் | | 24 | 22 | 1 |
| அலுவலக உதவியாளர் ((ஒப்பந்த அடிப்படையில்) | PL 1 | 1 | - | 0 |

## அ. ஊழியர் திறன்விருத்தி

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது தனது சேவைகளின் தரத்தினை மேம்படுத்துவதற்காக பங்களிப்பினை வழங்கும் அந்தந்த துறையிலுள்ள ஊழியர்களின் மேம்பாடு குறித்து கூடிய கவனம் செலுத்துகின்றது. 2019 ஆம் அண்டினுள் நடாத்தப்பட்ட ஊழியர் பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள் கீழே அட்டவணை 08 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 08- 2019 இல் நடாத்தப்பட்ட ஊழியர் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

| இல | பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | பங்குபற்றாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | செயற்றிறன் தடைத்தாண்டல் பரீட்சை தொடர்பான கருத்தரங்கு (தமிழ் மொழி) பாவனையாளர் விடயங்களை மேம்படுத்தல் கருத்தரங்கு கொரியா | 100 |
| 02 | தொழில்முறை பகுப்பாய்வு | 02 |
| 03 | வியாபாரம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஐககிய நாடுகளின் சம்மேளனம் (ஜேனீவா) | 01 |
| 04 | அரச நிதி சட்டதிட்டங்கள் (மிலோடா) | 01 |
| 05 | போக்குவரத்து முகாமைத்துவம் தொடர்பான கருத்தரங்கு | 02 |
| 06 | சீனா மற்றும் இலங்கைக்கிடையிலான வியாபார கலாச்சாரத்தினை பரிமாறிக் | 01 |
| 07 | கொள்ளுதல் தொடர்பான கருத்தரங்கு - சீனாவில் | 01 |
| 08 | சேவையை நிறைவு செய்தல் (தொழிலாளர் கல்வி தொடர்பான தேசிய நிறுவகம்) | 01 |
| 09 | சம்பள நிரிணயம் தொடர்பான இரண்டு நாள் கருத்தரங்கு , டீ என்ட் ஆர் புரொபசனல் டிவலப்மன்ட் சென்டர் (தனி) நிறுவனம் | 02 |
| 10 | செயற்றிறன் மிக்க தெளிவுபடதத்ல் தொடர்பான இருநாள் கருத்தரங்கு - இலங்கை கட்டளைகள் நிறுவகம் | 04 |
| 11 | குறுக்கு கெள்விகள் கேட்டல் தொடர்பான சான்றிதழ் கருத்தரங்கு ( 08 வார நடைமுறைப்பயிற்சி) இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் | 02 |
| 12 | செலவு மற்றும் செலுத்தும் நடைமுறை மற்றும் நிதிச்சட்டம், PRAG நிறுவனம் | 05 |
| 13 | முகாமைத்துவ மற்றும் ஆய்வாளர்களுக்கான ஆரம்ப கணக்கெடுப்பு,இலங்கை பயன்பாட்டு புள்ளிவிபர நிறுவனம் | 02 |

## ஆ.ஆதிகார சபையின் ஊழியர்குழாமின் நிலையினை வலுப்படுத்தல்

இ. ஊழியர்கள் ஊக்குவிப்பும் நலன்புரியும்.

குறித்த ஆண்டு காலப்பகுதியில் ஊழியர்களுக்கு மகிழ்ச்சியானதும் சாதகமானதுமான தொழில் செய்யும் சூழலினை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு, மருத்துவக் காப்புறுதித்திட்டம்,கலாச்சார மற்றும் சமயம் சார்ந்த நிகழ்ச்சித்திட்டஙகள் . ஊழியர் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டகள், ஊழியர் விருத்தி நிகழ்ச்சித்திட்டஙக்ள ,ஊழியர் அங்கீகாரம் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் பதவியினருக்கு தொடர்ந்தும் முன்னேடுக்கப்பட்டன.

இ.பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளுதல்

சட்டமா அதிபர் திணைக்களத்தில் கௌரவ சட்டமா அதிபரின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக

## பாவனையாளர் அலுவல்கள் பேரவை

பாவனையாளர் அலுவல்கள் பேரவையின் நிருவாக செயற்பாடுகள் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதிகாரசபையினால் குறிப்பீடு செய்யப்படுகின்ற பிரதான போட்டி எதிர் செயற்பாடுகள் தொடர்பில் மீள் புலனாய்வு தீர்மானம் நிறைவேற்றுவதற்கும் சட்டத்தினால் தத்துவமளிக்கப்பட்டுள்ளது. சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி மிகை விலையிடல் .முறையற்ற சந்தை நடவடிக்கைகள் மற்றும் சந்தை முறைமையினைக் கையாளுதல் என்பன விசாரணைக்காக பேரவைக்கு குறிப்பீடு செய்யப்படுகின்றது.தேவைப்படுமிடத்து பேரவையானது விற்பனை செய்யப்படவுள்ள பொருட்கள் அல்லது வழஙக்ப்பட்டுள்ள செவைகளின் விலைகளை உயர்த்துவதற்கு தேவையான பரிந்தரைகளை வழங்குவதற்கும் தத்துவமளிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாடுகள் / உசாத்துணைகள்

| செயற்பாடு | முன்னேற்றம் |
|---|---|
| பொதுமக்களின் நலன்களுக்கெதிராக தொழிற்படுகின்ற போட்டி எதிர் செயற்பாடுகளுக்கெதிராக நிவாரணம் வழங்கப்படுவதனை உறுதி செய்யதல் | 01-நிலுவையிலுள்ள |
| பொருட்கள் மற்றும் சேவைகளின் ஆகக்கூடிய வழலையினை பரிந்துரை செய்தல் | 05 |
| அதிகூடிய விகைள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளுதல் | 02 |

## 2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி செயலாற்றுகை கூற்று

| சொத்துக்கள் | 2019.12.31 இலுள்ளவாறு இலங்கை ரூபா 000' | 2019.12.31 இலுள்ளவாறு இலங்கை ரூபா 000' |
|---|---|---|
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| காசும் காசுக்கு சமமானவையும் | 74,663 | 70,602 |
| வியாபார மற்றும் ஏனைய பெறத்தக்கவைகள் | 35,667 | 31,280 |
| சரக்கிருப்பு / இருப்புக்கள் | 2,710 | 2,122 |
| ஏனைய நடைமுறை நிதிசார் சொத்துக்கள் | 10,980 | 10,481 |
| | **124,020** | **114,485** |
| குறைவேலை (அபிவிருத்திக் கட்டம் ) | 1,376 | 138 |
| **நடைமுறையல்லா சொத்துக்கள்** | | |
| முதலீடு | 306,380 | 275,777 |
| பணிக்கொடை நிதிய முதலீட்டுக் கணக்கு | 54,234 | 31,530 |
| ஏனைய நடைமுறையல்லா நிதிச் சொத்துக்கள் (பதவியினர் கடன்) | 17,800 | 18,370 |
| கட்டிட குத்தகை | 775 | 800 |
| ஆதனம், பொறி, உபகரணம் | 82,688 | 87,671 |
| | **461,877** | **414,149** |
| மொத்த சொத்துக்கள் | **587,273** | **528,772** |
| பொறுப்புக்கள் | - | |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | |
| சேர்ந்த செலவுகள் | 54,320 | 43,749 |
| செலுத்தத்தக்கவைகளும் ஏனைய பொறுப்புக்களும் | 6,249 | 10,394 |
| | **60,569** | **54,143** |
| **நடைமுறையல்லா பொறுப்புக்கள்** | | |
| பணிக்கொடை ஏற்பாடு | 79,620 | 67,927 |
| மொத்த பொறுப்புக்கள் | **140,189** | **122,069** |
| மொத்த தேறிய சொத்துக்கள் | **447,084** | **406,702** |

| | | |
|---|---|---|
| **தேறிய சொத்துக்கள் / உரிமை** | | |
| திரட்டு நிதியம் | 63,191 | 63,191 |
| நீடித்த வருமானம் | 14,241 | 35,017 |
| ஒதுக்கங்கள் | 369,651 | 308,494 |
| | **447,084** | **406,702** |
| மொத்த தேறிய சொத்துக்கள் / உரிமை | **447,084** | **406,702** |

குணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புக்ள் என்பன இத்தகைய நிதிக்கூற்றுக்களின் முக்கிய பகுதியாகும்.இத்தகைய நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபையே பொறுப்பாகும்.இத்தகைய நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்களின் சார்பில் கையொப்பமிடப்பட்டுள்ளது.

........................................................ நிதிப்பணிப்பாளர்

........................................................ பணிப்பாளர் நாயகம்
பாவனையாளர்கள் அலுவல்கள்
அதிகார சபை

........................................................ தலைவர்

## 2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி செயலாற்றுகை கூற்று

| | 2018.12.31 இலுள்ளவாறு இலங்கை ரூபா 000' | 2018.12.31 இலுள்ளவாறு இலங்கை ரூபா 000' |
|---|---|---|
| **வருமானம்** | | |
| மீண்டுவரும் வருமானம் | 502,975 | 489,982 |
| தண்டப்பண வரமானம் | 39,094 | 32,910 |
| ஏனைய வருமானம் | 67,380 | 58,883 |
| | **609,449** | **581,775** |
| **செலவுகள்** | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | (385,263) | (376,770) |
| பிரயாண செலவுகள் | (15,312) | (12,109) |
| வழங்கல்களும் நுகரத்தக்கவைகளும் | (10,602) | (10,353) |
| பேணுதல் | (9,668) | (7,567) |
| ஒப்பந்த சேவைகள் | (67,884) | (53,516) |
| தேய்மானம் | (32,123) | (27,466) |
| ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள் | (44,152) | (31,099) |
| நிதிச் செலவு | (204) | (150) |
| மொத்தச் செலவுகள் | **(565,208)** | **(519,030)** |
| குறித்த ஆண்டுக்கான மொத்த தேறிய மிகை / (பற்றாக்குறை) | **44,242** | **62,746** |
| மற்றைய விரிவான வருமானங்கள் | | |
| மறுமதிப்பீட்டு இலாபம் | 16,916 | 38,815 |
| ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம் | **61,157** | **101,561** |

# 31.12.2019 இற்கான பங்கு மாற்றங்களின் அறிக்கை

| | 2019 இலுள்ளவாறு இலங்கை ரூபா 000' | 2019 இலுள்ளவாறு இலங்கை ரூபா 000' |
|---|---|---|
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள் | | |
| சாதாரண நடவடிக்கைகளிலிருந்தான மிகை / (பற்றாக்குறை) | **44,242** | **62,746** |
| சீராக்களுக்காக | | |
| சொத்து விற்பனை இலாபம் / (நட்டம்) | 22 | - |
| தேய்மானம் | 32,123 | 27,466 |
| பணிக்கொடை ஏற்பாடு | 13,602 | 20,603 |
| தவணை முறைக் கடன் கரைப்பு | 25 | 25 |
| கற்பசைன் சொத்துக்களின் குறைவு (குறை வேலை) | **90,014** | **110,840** |
| தொழிற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம் | 6,427 | 2,172 |
| செலுத்தத்தக்கவைகளில் அதிகரிப்பு | (5,474) | (3,634) |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்களில் அதிகரிப்பு | (1,909) | (2,106) |
| பணிக்கொடை கொடுப்பனவு | (1,239) | (154) |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல் | **87,819** | **107,118** |
| நீண்டகால கடனில் குறைவு (பதவியினர் கடன்) | | |
| | (10,246) | (9,506) |
| | (22.704) | (10,898) |
| | (30,602) | (45,257) |
| | 570 | (5,507) |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்கள் | **(62.982)** | **(71,168)** |
| நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்கள் | | |
| திறைசேரி மானியம்-மூலதனம் | 11,348 | 9,801 |
